### புவி வெப்பமடைதலை தடுக்க

# வேப்பிலை கட்டி சிறுவர்கள் பிரசாரம்

திருச்சி, அக். 25: புவி வெப்பமடைதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சிறுவர், சிறுமிகள் உடலில் வேப்பிலை களை கட்டிக் கொண்டு நேற்று பிரசாரம் மேற்கொண்டனர்.

வளி மண்டலத்தில் கார்பன் வாயுக்களின் அடர்த்தி அதிகரிப்பதால் புவி வெப்பம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. தற்போது 389 பிபிஎம் ஆக இருக்கும் இந்த அடர்த்தி, 450 பிபிஎம் அளவை தாண்டி விட்டால் பூமியில் வாழும் எல்லா உயிரினமும் அழிந்து விடும். எனவே இதை 350 பிபிஎம்க்குள் குறைக்க உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக டிசம்பர் 7 முதல் ·18ம் தேதி வரை டென்மார்க்கின் கோபன்எகன் நகரில் உலக நாடுகள் பங்கேற்கும் மாநாடு நடக்கிறது. இம்மாநாட்டில் ‘350 பிபிஎம்’ முக்கிய கருப்பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டது.இது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மேக்ட் வேர்கள் குழந்தை கள் இயக்க கூட்டமைப்பு சார்பில் நேற்று திருச்சி, புதுக்கோட்டை, உட்பட பல இடங்களில் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

திருச்சி மத்திய பஸ் நிலையத்தில் பிரசாரம் மேற்கொண்ட சிறுவர், சிறுமிகள் தங்கள் உடலில் வேப்பிலைகளை கட்டிக் கொண்டு புவி வெப்பமடைதல் குறித்த விழிப்புணர்வு நோட்டீசுகளை விநியோகித்தனர்.




புவி வெப்பமாதல் குறித்து மக்களிடம் எடுத்துக்கூறும் வகையில், ‘மேக்ட்’ வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பு சார்பில் திருச்சி, புதுக்கோட்டை, சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட இடங்களில் நேற்று விழிப்புணர்வு பிரசாரம் நடந்தது. திருச்சி மத்திய பஸ் நிலையத்தில் பிரசாரம் நடத்திய சிறுவர், சிறுமிகள் உடலில் வேப்பிலைகளை கட்டிக் கொண்டு புவி வெப்பமடைவதால் ஏற்படும் விளைவுகள், அதிலிருந்து தப்பிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து முழக்கம் எழுப்பினர்.